**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 108/2021**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 31.10.2025 | | |
| பெயர்: | முருகன்<br>(PW–1 Chief ) | தகப்பனார் பெயர்: | மனோகரன் |
| கிராமம்: | மகேந்திரபள்ளி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | செயல் அலுவலர் | வயது : | 42/2025 |

**<u>முதல் விசாரணை : 31.10.2025</u>**

நான் அ/மி திருமேனியழகர் திருக்கோயிலில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. வழக்கு சொத்திற்கான 'அ' பதிவேட்டின் கணிணி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 07.06.2019 தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு 2 முதல் 6 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. 31.01.2020 தேதியிட்ட 1ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதியுடன் சேர்ந்து 8ம்

பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த Deposit of Title Deed சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகவும்

4. 13.10.2021 தேதியிட்ட வாதி திருக்கோயில் சார்பாக மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கப்பட்ட மனுவின் அலுவலக நகல் **வா.சா.ஆ.4** ஆகவும்

5. 23.06.2021 தேதியிட்ட சீர்காழி வருவாய் கோட்டாட்சியருக்கு வாதி திருக்கோயில் சார்பாக கொடுக்கப்பட்ட மனு அலுவலக நகல் **வா.சா.ஆ.5** ஆகவும்

6. 05.07.2021 தேதியிட்ட பிரதிவாதிகளுக்க அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.6** ஆகவும்

7. வாதி வழக்கறிஞர் அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.7** ஆகவும்

8. வாதி வழக்கறிஞர் அறிவிப்பை 4ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.8** ஆகவும்

9. வாதி வழக்கறிஞர் அறிவிப்பை 5ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.9** ஆகவும்

10. வாதி வழக்கறிஞர் அறிவிப்பை 6ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.10** ஆகவும்

11. வாதி வழக்கறிஞர் அறிவிப்பை 7ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.11** ஆகவும்

12. வாதி வழக்கறிஞர் அறிவிப்பை 8ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.12** ஆகவும்

13. வாதி வழக்கறிஞர் அறிவிப்பை 2ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய அறிவிப்பின் அசல் அஞ்சலக உறையுடன் கூடியது **வா.சா.ஆ.13** ஆகவும்

14. வாதி வழக்கறிஞர் அறிவிப்பை 3ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய அறிவிப்பின் அசல் அஞ்சலக உறையுடன் கூடியது **வா.சா.ஆ.14** ஆகவும்

15. 22.07.2021 தேதியிட்ட 1ம் பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலம் எனது வழக்கறிஞருக்கு அனுப்பிய பதிலறிவிப்பு சார்வு நகல் **வா.சா.ஆ.15** ஆகவும்

16. 10.10.2020 தேதியிட்ட வில்லங்க சான்றின் கணிணி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.16** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.